Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# Problems of Women in the Short Stories of Sunthara Ramasamy

**Dr. A. Anto Nishanthi**, Assistant Professor, Department of Tamil, Muslim Arts College,
Thiruvithancode – 629 174, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0009-0005-8903-4745**
**DOI: 10.5281/zenodo.14744509**

## Abstract

*A short story is a prose piece of literature that tells a short story. It is born in the thoughts of the author and completed in the thoughts of the readers. Short stories are created with the flaws and problems found in the society as the plot. In this way, Sundararamasamy is a famous Tamil poet and has identified the problems of women's life and made them into realistic stories. The setting of Sundararamaswamy's short stories is the villages around Kanyakumari district. All the short stories written by him have been delineating the problems of the society and the situations faced by the common people. The problems faced by female narrators in Sundararamasamy short stories such as dowry problems, hunger, moral criticism of women, violence against women are analysed and explained in the article.*

**Keywords:** Sundararamasamy, Women, Violence, Criticism, Life, Dowry.

## References

[1] Ratnam, Ira. *Kurunthokai*. Gangai Puthaga Nilayam, Thiyakarajanagar, Chennai, 2002.
[2] Singaravadivelan, A. *Aingurunuru*. Mullai Pathipagam, Chennai, 2012.
[3] Siddhivafira. *Mutthamiz Kalasam*. Ithal, Sundarararamasamy Sirapithal, 2019.
[4] Sundarararamasamy. *Sundarararamasamy Sirukathaigal*. Kalachuvadu Publications (P) Lit, Nagercoil, 2011.
[5] Tamilannal. *Thiruvalluvarin Manithaneyam*, Meenakshi Puthaga Nilayam, Madurai, 2000.
[6] Natarajan, V. *Palinam, Palli, Samuthayam*. Santha Publishers, Chennai, 2019.
[7] Neelakandan, M. *India Penniyam Ambedkarin Parvai*. Krishna Book House, Anna Nagar, Chennai, 2019.
[8] Parimelazhgar. *Thirukkural*. Saradha Pathipagam, Chennai, 2016.
[9] Manushyap Puthiran. *Uirmai*. Uirmai Veliedu, Monthly, 2004
[10] Murugesan, S. *Tamil Ilakiyaannkalil Samuthaya Sinthanaigal*. Thirukkural Pathipagam, M.G.R. Nagar, Chennai, 2006.
[11] Ravikumar. Pillai Keduthal Vilai. Kalachuvadu Publications (P) Lit, Nagercoil, 2021.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under Creative Commons Attribution4.0 International License.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


# சுந்தரராமசாமியின் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல் பிரச்சனைகள்


**முனைவர். ஆ. ஆன்றோ நிஷாந்தி**, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு – 629 174, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0005-8903-4745


**DOI: 10.5281/zenodo.14744509**



**ஆய்வுச்சுருக்கம்**

*கதை ஆசிரியரின் சிந்தனையில் பிறந்து, வாசகர்களின் சிந்தனையில் நிறைவு பெறுவதுசிறுகதையாகும். சமூகத்தில் காணப்படும் குறைபாடுகளையும், சிக்கல்களையும் கதைக்கருவாகக் கொண்டு சிறுகதைகள் படைக்கப்படுகின்றன. அவ்வகையில்சுந்தரராமசாமி பெண்களின் வாழ்வியல் பிரச்சனைகளை அடையாளம் கண்டு அவற்றை எதார்த்தமானக் கதைகளாக உருவாக்கியுள்ளார். சுந்தரராமசாமி சிறுகதைகளில் இடம்பெறும் பெண் கதைமாந்தர்கள் சந்திக்கும் சிக்கல்களான வரதட்சணையால் ஏற்படும் பிரச்சனைகள், பசிக்கொடுமை, பெண்கள் பற்றிய ஒழுக்க விமர்சனங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து விரிவாக ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளது.*



**குறிப்புச்சொற்கள்:** சுந்தரராமசாமி, பெண்கள், வன்கொடுமை, விமர்சனங்கள், வாழ்வியல், வரதட்சணை.


## முன்னுரை

மனிதனின் உணர்ச்சி வெளிப்பாடே படைப்பிலக்கியம் தோன்றக் காரணமாகியது. மனிதன் சிந்திக்க தொடங்கிய போதே படைப்பிலக்கியமும் தோன்றிவிட்டது. தற்கால அவசர வாழ்க்கையில் மிக விரைவாக படிக்கக் கூடிய படைப்பிலக்கியமாக விளங்குவது சிறுகதையாகும். சிறுகதைகள் மக்களின் வாழ்க்கையை, வாழ்வியல் சார்ந்த மாற்றத்தை, மறுமலர்ச்சியை வெளிப்படுத்தும் ஊடகமாக செயல்பட்டன. சிந்தனையாளர்களும், இயக்கவாதிகளும் சிறுகதையைத் தம் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கருவியாகக் கொண்டனர். இதன் காரணமாக சிறுகதைத் துறைக்கு எழுத்தாளர் பலர் வந்தனர். அவர்களுள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த சுந்தரராமசாமி குறிப்பிடத்தக்கவராவார். இவரது சிறுகதைகள் பெரும்பாலும் சமுதாயப் பிரதிபலிப்புகளை மையம் கொண்டுள்ளன. சமுதாயத்தின்ஓர் அங்கமாகத் திகழும் பெண்களின் வாழ்வியலைப் பல்வேறு கோணங்களில் சிறுகதைகளாகப் படைத்துள்ளார். பெண்கள் குடும்பம், சமுதாயம் எனும் நிறுவனம் சார்ந்த சூழல்களில் எதிர் கொள்ளும் சிக்கல்களை சிறுகதையாகப் புனைந்துள்ளார். ஆகவே சுந்தரராமசாமியின் சிறுகதைகளின் வழி பெண்களின் வாழ்வியல் பிரச்சனைகளை ஆராய்வதாய் இக்கட்டுரை அமைகிறது.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


**பெண்கள் வாழ்வியல்**

பெண் என்பவள் குடும்பத்தைக் கட்டிக்காக்கும் கடமையுடையவள். சமுதாயத்தில் பெண்களின் பங்களிப்பு மிகப்பெரியதாகும். பெண் தன்னையும் காத்துக் கொண்டு, தன்னை சார்ந்தவர்களையும் சோர்வில்லாமல் பேணிக்காப்பவள் என்பதை திருவள்ளுவர்,

**தற்காத்துக் தற்கொண்டாற்பேணித்தகை சான்ற**
**சொற்காத்துச் சோர்விலான் பெண் (குறள்., 56)**

என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் இலக்கியங்கள் பெண்ணை நல்லாள் (குறள்., 924), அணங்கு (குறள்., 1081), பூவை (குறு., 4), மடவரல் (நெடுநெல்., 39), மடவோள் (ஐங்., 192: 2), மாயோள் (ஐங்.145), மங்கை (முல்லை 47) என பலப் பெயர்களால் குறிப்பிடப்பட்டுள்ளாள். பெண்ணில்லாத உலகத்தைக் கற்பனை செய்து பார்ப்பதே கடினமான ஒன்றாகும். சோதனைகள் வேதனைகளைத்தாங்கி வெற்றியின் பாதையில் வீறு கொண்டு பயணிக்கும் பெண்கள், இவ்வுலகுக்கு வரப்பிரசாதமாய் திகழ்கிறார்கள் (சித்திவஃபீரா. ப. 3). சுந்தரராமசாமியின் சிறுகதைகளில் பெண்களின் வாழ்வியல் பிரச்சனைகளை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. அவர் வாழ்ந்த காலத்தில் சந்தித்தபெண்களையும், தன் வாழ்வில் பயணித்த பெண்களையும் கதை மாந்தர்களாகப் படைத்து, அவர்கள்படும் துன்பங்களையும், துயரங்களையும் உள்ளது உள்ளபடியே வெளிப்படுத்தியுள்ளார்.

**சுந்தரராமசாமியின் சிறுகதைகள்**

சிறுகதை என்பது சுருக்கமாகக் கதை கூறும் புனைவுகளான உரைநடை இலக்கியமாகும். சுந்தரராமசாமியின் சிறுகதைகளின் கதைக்களம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சுற்றியுள்ள கிராமங்களாகும். இவரால் படைக்கப்பட்ட சிறுகதைகள் அனைத்தும் காலச்சுவடு பதிப்பகத்தால் தொகுக்கப்பட்டு 'சுந்தரராமசாமியின் சிறுகதை தொகுப்புகள்' என 2006 இல் வெளியிடப்பட்டுள்ளது.

**ஆய்வுக்கான கதைகள்**

| வ. எண் | சிறுகதை | கதைக்கரு |
|---|---|---|
| 1. | பிள்ளைகெடுத்தாள் விளை | முன்னேறத் துடிக்கும் தாயம்மா என்ற பெண்ணை நேரடியாக தாக்கி வீழ்த்த முடியாதவர்கள் அவளது நடத்தையில் களங்கம் ஏற்படுத்தி அப்பெண்ணை வீழ்த்தி நிலைகுலையச் செய்வதே இக்கதையின் கருவாகும். |
| 2. | ஜகதி | மனநிலை பாதித்த தெருவில் நடமாடும் பெண்ணைப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி கற்பிணியாக்கியத்தை இக்கதை கருவாகக் |

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

| | | |
|---|---|---|
| | | கொண்டுள்ளது. |
| 3. | **திரைகள் ஆயிரம்** | வீட்டு வேலை செய்யும் ஏழைப் பெண்ணான மரியம்மையை பணக்கார வர்க்கத்தினர் இருபத்தியொரு நாட்கள் ஒரு அறையில் அடைத்து வைத்து பாலியல் கொடுமை செய்துள்ளனர். பாதிக்கப்பட்ட அப்பெண் தன்னைச் சீர்குலைத்தவர்களுக்கு தண்டனை வாங்கித்தர போராடும் நிகழ்வாக கதைக்கரு அமைந்துள்ளது. |
| 4. | **பட்டுவாடா** | துப்பாக்கிச் சூட்டில் கணவனை இழந்த இளம்பெண் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமையை பட்டுவாடா சிறுகதை கருவாகக் கொண்டுள்ளது, |
| 5. | **லீலை** | கருப்பு நிறம், உடல் பருமன் மற்றும் அதிக வரதட்சணை கொடுக்க முடியாமல் முப்பத்திரண்டு வயதாகியும் திருமணம் கைகூடாமல் இருக்கும் அலமேலு மூலம் முதிர்கன்னிகளின் மனநிலையை வெளிப்படுத்தியுள்ளார். |
| 6. | **உணவும் உணர்வும்** | ஒருவேளை சோற்றுக்காகப் பிச்சை எடுத்துச் சாப்பிடும் தாய் மற்றும் மகளின் அவல நிலையே இக்கதையின் கருவாகும். |

**பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள்**

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது பெண்களுக்கெதிராக நிகழும் உடல் அல்லது பாலியல் வன்முறையைக் குறிக்கிறது. ஆண்களை விடத் தாழ்ந்த நிலைக்குப் பெண்களைத் தள்ளும் சமுதாயச் செயற்பாடுகளுள் ஒன்று, பெண்களுக்கு எதிரான வன்முறையாகும். "பெண்கள்மீது வன்முறை என்பது பெண்களுக்கும் உடலியல், பாலியல் மற்றும் உளவியல் வழி கொடுமை அல்லது இன்னல் ஏற்படுத்துவது ஆகும். இது அச்சுறுத்துதல், கட்டாயப்படுத்துதல், உரிமையைப் பறித்தல் என்ற நிலைகளில் உள்ளன. இது பொது இடங்களில் நடைபெற்றாலும், தனிப்பட்ட வாழ்வில் ஏற்பட்டாலும் வன்முறை தான்" (வி. நடராஜன். ப. 170). முன்காலங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்த பெண் வன்முறைகள் இன்று அன்றாட செய்திகளாகி விட்டன. பெண்கள் தெய்வமாக, தேவதைகளாகப் போற்றப்படும் இம்மண்ணில் தான் பெண்களுக்கெதிரான வன்முறைகளும் கொடுமைகளும் நடந்தேறிவருகின்றன.

“பெண்ணின் பெருந்தக்க யாவுள” (குறள்., 54) என்று வள்ளுவர் பெண்ணைப் பெருமைப்படுத்தியுள்ளார். அப்படி பெருமைக்குரிய பெண்களின் வாழ்வு தினந்தோறும்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

வீட்டுக்குள்ளேயும், வெளியேயும் சவால்களுக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. “நவம்பர் 25 சர்வதேச பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்புத் தினமாகும்" (மூ. நீலகண்டன். ப. 171) வன்முறை ஒழிப்புத் தினங்களைக் கடைபிடித்து, சட்டங்களை இயற்றினாலும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேச் செல்கிறது.

**பாலியல் வன்கொடுமை**

'திரைகள் ஆயிரம்' சிறுகதையில் வீட்டு வேலைக்கு வந்த இளம்பெண் மரியாவை 'சர்வதேச நட்புறவு சங்கம்' என்ற அமைப்பினை நடத்தும் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த குரியன் ஜார்ஜ் மற்றும் அவரது நண்பர்களும் சேர்ந்து பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர். இச்செய்தி 'திருவிதாங்கூர்நேசன்' பத்திரிகையில்" சர்வதேசநட்புறவு சங்கமா அல்லது காம தேவனின் களியாட்ட கூட்டமா?" (சுந்தரராமசாமி. ப. 329) என்ற தலைப்பில் பத்திரிக்கை ஆசிரியர் இசக்கி தைரியமாக அம்பலப்படுத்தினார். மரியம்மை துணிந்து வழக்கு தொடுத்து குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கித்தரப் போராடினாள். இச்செய்தியை பத்திரிக்கையில் படித்த சுந்தரராமசாமியின் அம்மா ஏழைப்பெண்ணான மரியம்மைக்கு நடந்த கொடுமையைக் கணவரிடம் கூறி கவலைப்பட்டபோது "அந்த பெண்ணெப்பத்தி உனக்கு என்ன தெரியும்? எப்பேர் பட்டதோயாரு கண்டா ? கேட்டு சீரழிஞ்ச கழுதையா இருக்கும். நாம் என்னத்த கண்டோம் அப்படீன்னு சொன்னார்" (சுந்தரராமசாமி. ப. 344) இப்படித்தான் வன்முறைக்குள்ளானப் பெண் துணிந்து போராடும் போது பேசப்படுகிறாள். கடைசியில் மரியம்மை நடத்தை சரியில்லாத பெண் என்ற அவப்பெயரைப் பெறுகிறாள். பாதிக்கப்பட்டப் பெண்ணையே குற்றம் சாட்டும் சமூகமாக இருப்பதால் ஆண்களால் வன்முறைக்குள்ளாக்கப்பட்ட பெண்கள் வெளியே சொல்ல தயங்குகின்றனர். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் வெளிப்படும்போது மட்டும் உணர்ச்சி வசப்படும் சமூகம் உண்மையை உணர்ந்து அதை களைவதற்குச் செய்ய வேண்டியவற்றை செய்யத் தவறி விடுகிறது.

'பட்டுவாடா' சிறுகதையில் வரும் பெண்ணின் கணவர் துப்பாக்கி சூட்டில் இறந்தமையால், அரசாங்கத்திலிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் சிறுசிறு உதவித் தொகைகள் கிடைக்கும். அப்படி ஒருநாள் உதவித்தொகை பெற வரிசையில் நிற்கும்போது கூட்ட நெரிசலை பயன்படுத்தி, சில ஆண்களால் தேவையற்ற சீண்டல்களுக்கும், வன்முறைகளுக்கும் ஆளாவதை கதை சித்தரித்துள்ளது.

**மனநிலை பாதித்த பெண்ணின் நிலை**

மனநிலை என்பது உணர்ச்சியின் ஓர் அம்சமாகும். பெண்ணைப் போகப் பொருளாகவே கண்ணோக்கும் சமூகத்தில், மனநிலை பாதித்துத் தெருவில் நடமாடும் பெண்களின் நிலை கவலைக்குரியதாகும். அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தால் பலரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படுகின்றனர். பள்ளப்பாடி எனும் அழகிய கிராமத்தில் 'ஜகதி' என்ற மனநிலை சரியில்லாத பெண் இருந்துள்ளாள். ஊர்ப்பெண்கள் அவளுக்கு உணவு

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

கொடுப்பர். இரவில் ஒரு பாழடைந்த வீட்டின் திண்ணையில் தூங்குவாள். இந்நிலையில் முகந்தெரியாத நபர் மனநிலை பாதித்த பெண் என்று கூடப் பாராமல் பாலியல் வன்புணர்வு செய்ததால் சில மாதங்களில் ஜகதி கற்பிணி ஆனாள். அவளுக்கு "அழகானஆண் குழந்தை பிறந்தது. ஊர்க்காரர்கள் அனுஜன் எனப் பெயரிட்டு அழைத்தார்கள். அனுஜனின் முகச்சாடைக்கு ஊரில் நூறு ஆண்களின் பெயர்களையாவது பெண்கள் மாறி மாறி அடையாளம் சொன்னார்கள்" (சுந்தரராமசாமி. ப. 835). மனநிலை பாதித்தப் பெண்ணைக் கூட இச்சமுதாயம் விட்டு வைக்காது என்பதற்கு 'ஜகதி' சிறுகதை சிறந்த எடுத்துக்காட்டாகும். இப்பிரச்சனை எதிர்காலத்தில் தொடராமல் இருக்க சிறுவயதிலேயே ஆண் குழந்தைகளுக்குப் பெண்கள் மீதான மதிப்பினை ஏற்படுத்த வேண்டும். ஆணின் மனமாற்றமே இப்பிரச்சனைக்குரிய நிரந்தர தீர்வாகும்.

**ஒழுக்க விமர்சனங்கள்**

பெண்களை பிளவுபடுத்தும் முக்கியமான கூறு பெண்ணைப் பற்றிய ஒழுக்க விமர்சனங்களாகும். ஒழுக்க அவதூறு, பெண்ணுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய கொடுமையாகும். ஒரு பெண்ணின் நல்வாழ்வையையும்எதிர்கால மேன்மையையும் குலைக்க சிறு அவதூறு போதுமானதாகும். மிகச்சிறந்த தொழில் புரிபவளை, திறமைசாலியை ஒன்றுக்கும் உதவாமல் மழுங்கடிக்கச் செய்யவும் ஒழுக்கப் பழியே காரணமாகிறது, வாதங்களால் வீழ்த்த முடியாத பெண்ணை ஒழுக்கம் என்ற ஒரு வார்த்தையைச் சொல்லி வீழ்த்தி விடலாம். குடும்பத்தில் ஆரம்பித்து தெருவில் கடந்து போகும் ஆட்கள் வரை பெண்களைக் குறி பார்த்து எய்யும் ஒரு வார்த்தை ஒழுக்கம் என்பதாகும். 'நடத்தை கெட்டவள்' என்ற சொல் மூலம்ஒருப் பெண்ணை வீழ்த்தி விடலாம். இச்சொல் வாழ்நாள் முழுவதும் அப்பெண்ணைத் துரத்திக் கொண்டே இருக்கும். பெண்ணை நேரடியாகத் தாக்க முடியாதவர்கள் அவளது நடத்தையில் களங்கம் கற்பித்து முடக்கி விடுகின்றனர். பெண்ணின் ஒழுக்கத்தை விமர்சனத்திற்கு உட்படுத்துவது காலங்காலமாகப் பெண்ணை வீழ்த்த உதவும் ஆயுதமாகத் திகழ்கிறது.

'பிள்ளை கெடுத்தாள் விளை' சிறுகதையில் வரும் தாயம்மா சாதியில் தாழ்ந்த நிலையிலிருந்தாலும் தன்னுடைய கடின முயற்சியால் படித்து மாடக்குழியில் தலைமையாசிரியராக பணிபுரிகிறாள். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த பெண்ணின் எழுச்சியைக் கண்டு பொறாமைப் படும் உயர்சாதி ஆண்கள் பழிதீர்க்க சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். "குறுகிய காலத்தில் குறுக்கு வழியில் பணத்தை சம்பாதித்த ஒரு அரசியல்வாதியின் மகன் மணிகண்டன் கணக்கில் ஓட்டை என்று தாயம்மா அவனுக்கு பள்ளிக்கூடம் விட்டபின்பு தனியாகப் பாடம் எடுத்து வந்திருக்கிறாள். அப்படி எத்தனையோ குழந்தைகளைத் தனியாக கவனித்து கரையேற்றி விட்டிருக்கிறாள் என்பது ஊர் அறிந்த செய்தி தான்" (சுந்தரராமசாமி. ப. 819) ஒரு நாள் மணிகண்டன் அழுதுகொண்டே வீடு திரும்பியதை

காரணமாக்கித் தாயம்மா என்ற பெண்ணுக்கு எதிராக வீண்பழி சுமத்த திட்டமிட்டனர். ஆனால் கதையின் ஆசிரியரான சுந்தரராமசாமி மணிகண்டனிடம் தாயம்மா தவறாக நடந்து கொண்டதாக எவ்விடத்திலும் குறிப்பிடவில்லை. அவளுக்கு எதிராக சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கும் முன்பே 'நடத்தை கெட்டவள்' என்று கூறி அடித்து துன்புறுத்துகின்றனர். இதனால் மனமுடைந்த தாயம்மா ஊரை விட்டே சென்று விடுகிறாள். "இந்த கதையில் வரும் 'தலைமையாசிரியை விளை' என மாடக்குழியினர் சொல்லிக்கொண்டிருந்த அந்தப் பகுதி பின்னர் 'பிள்ளை கெடுத்தாள்விளை' என்றானதையும்" (ரவிக்குமார். ப. 30) காணும்போது தாயம்மா குறித்த ஒழுக்க விமர்சனமானது காலங்காலமாக நிலைத்திருந்து அப்பெண்ணைக் களங்கப்படுத்த வேண்டும் என்பதைப் புலப்படுத்துகிறது. தாயம்மாவுக்கு நேர்ந்த அவலம் இன்றும் தொடர்ந்து கொண்டே தான் இருக்கிறது.

**வரதட்சணை பிரச்சனை**

இந்திய சமுதாயத்தில் பெண்களை வாட்டி வதைக்கின்ற கொடுமைகளுள் வரதட்சணையும் ஒன்றாகும். "வரதட்சணை என்பது சொத்தாகவோ மதிப்புமிக்க காப்புறுதியாகவோ இருப்பதைக் குறிக்கும். அது நேரடியாகவோ மறைமுகமாகவோ திருமணத்தின் போது ஒருவரால் மற்றொருவருக்குக் கொடுக்கப்படும். அந்த வரதட்சணை திருமணத்தின் போதோ, அதற்கு முன்போ அல்லது அதற்குப் பின்போ கொடுக்கப்படவும் கூடும்". (சி. எஸ். தேவநாதன். ப. 106) வரதட்சணை காரணமாகப் பெண்கள் நாற்பது வயது வரையிலும் கூட முதிர்கன்னியாகவே வாழ்ந்து வருகின்றனர். பெண்கள் உயர் கல்வி, நல்ல பதவி, ஊதியம் என்ற நிலையை அடைந்த பின்னும் வரதட்சணை கொடுமைகள் தொடரவே செய்கிறது. "பெண்களின் நலனைக் காக்க மைய அரசு 1961-இல் வரதட்சணை தடைச்சட்டத்தைக் கொண்டு வந்தது. பின்னர் இது 1986 ஆம் ஆண்டு பெண்களுக்கு மேலும் பாதுகாப்புத் தரும் வகையில் திருத்தப்பட்டு" (ச. முருகேசன். பக். 103, 104) இருப்பினும் சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இப்பழக்கத்தைச் சட்டத்தால் மட்டுமே தடைசெய்துவிட முடியாது. இளைய தலைமுறையினரிடையே விழிப்புணர்வு ஏற்பட்டால் மட்டுமே தடை செய்ய முடியும்.

'லீலை' சிறுகதையில் வரும் அலமேலு இசைக்கல்லூரியில் நான்கு வருடம் படித்து சங்கீத பூஷணம் பட்டம் பெற்றவள். அவள் சற்று பருத்த உடல்வாகும், கறுத்த நிறமும் உடையவள். அலமேலுவின் அப்பா மகாதேவ அய்யர் நானும் அவளுக்குப் பதினாறு வயசிலே ஜாதகத்தைத் தூக்கினது பாலக்காட்டிலிருந்து கன்னியாகுமரி வரையிலும் பார்த்துட்டேன் ஒன்னும் அமையலை (சுந்தரராமசாமி. ப. 290) என்று கவலைப்பட்டார். அதிக வரதட்சணை கொடுக்க முடியாமல் முப்பத்திரண்டு வயது தாண்டியும் அலமேலுவுக்குத் திருமணம் நடைபெறவில்லை. முதிர்கன்னிகளின் நிலையை உயிர்மை இதழ் கவிதையின் வாயிலாகப் படிகமாக மனுஷ்ய புத்திரன் விளக்கியுள்ளார்.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**பறவைகளுக்காய் ஏங்கினேன்**
**அண்டைவீட்டார் தோட்டங்களிலெல்லாம்**
**அவற்றின் இனிய கூச்சல்**
**ஏனோ வரவில்லை**
**என் தோட்டத்திற்கு ஒரு பறவையும்**
**நம்பிக்கையிழந்து விடாமல் காத்திருக்கிறோம்**
**நானும் எனது திருஷ்டிப் பொம்மையும் (மனுஷ்ய புத்திரன். ப.32)**

அலமேலுவைப் போன்று இன்றைய காலக்கட்டத்திலும் படித்துப் பட்டங்கள் பல பெற்றிருந்தாலும் அழகு மற்றும்வரதட்சணை இன்றி பல பெண்கள் முதிர்கன்னியாகவே வாழும் நிலைக்கு தள்ளப் படுகின்றனர். இளையத் தலைமுறையிடம் ஏற்படும் மனமாற்றமே சமுதாயத்தில் வரதட்சணை நோயை அறவே நீக்கும் மருந்தாகும்.

**பசிக்கொடுமை**

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் மிகவும் முக்கியமானதாகவும், முதன்மையானதாகவும் விளங்குவது உணவாகும். இவ்வுணவு கிடைக்காமல் இன்னலுறும் மக்களின் நிலை மிகவும் வேதனைக்குரியதாகும்.

**வாடியபயிரைக் கண்டபோ தெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே**
**வீடுதோறிரந்தும் பசியாற தயர்ந்த**
**வெற்றரைக் கண்டுளம் பதித்தேன் (திருவ., 3471)**

என்று பசியால் வாடும் மக்களின் நிலைக்குறித்து உள்ளம் பதித்து பாடினார் வள்ளலார். "உலகில் பசியின் கொடுமைக்கு இணையானக் கொடுமை பிறிதொன்றில்லை. அறிவியல் முன்னேற்றம் விண்ணைத் தொடும் இன்றும், உலகில் பசிக்கொடுமையால் இறப்போர் தொகை கூடிக்கொண்டே போகிறது" (தமிழண்ணல். ப. 5) ஒரு நாட்டில் முதலில் களையப்பட வேண்டியது பசியாகும். 'உணவும் உணர்வும்' கதையில் சுந்தரராமசாமி பசியினால் அவதிப்படும் தாய் மற்றும் மகளின்நிலையை வெளிப்படுத்தியுள்ளார். ஏழைத்தாயின் எட்டு வயது பெண் குழந்தை பசியால் அழுகிறது. காலை முதல் உச்சிப் பொழுது வரை ஊரில் ஏறி இறங்காத வீடில்லை. கண்ணீர் விட்டும், குழந்தையைக் காட்டியும் யாரும் உதவி செய்யவில்லை. பசியைப் போக்க கையேந்திய போது, உனக்கு வேலை செய்தால் என்ன கொள்ளை? உனக்கெதற்கடிபிரசவமும் பிள்ளையும் (சுந்தரராமசாமி. ப. 840) என்று அவமானப்படுத்தினர். பசியின் மரண வேதனையைத் தாங்க முடியாத குழந்தை செத்துப் போகிறேன் என்று கூறி அழுதது. அதனால்தான் திருவள்ளுவர் "பசி என்னும் தீப் பிணி"(குறள் 227) எனக்குறிப்பிட்டுள்ளார். இன்றைய காலக்கட்டத்திலும் பலர் பசியின் காரணமாக பிறரிடம் கையேந்துவதை காணமுடிகிறது.

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

### முடிவுரை

இன்றைய இலக்கியங்கள் மக்களின் வாழ்வைப் பிரதிபலிப்பதோடு சமுதாயப் பிரச்சனைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. சுந்தரராமசாமியின் பிள்ளை கெடுத்தாள் விளை, லீலை, திரைகள் ஆயிரம், பட்டுவாடா, ஜகதி, உணவும் உணர்வும் போன்ற சிறுகதைகள் மூலம் பெண்கள் சந்திக்கும் வாழ்வியல் பிரச்சனைகளை படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேலும் இவரது சிறுகதைகள் பெரும்பாலும் பெண்கள் சமூகத்தில் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சனைகள், அவர்களின் ஏக்கங்கள் போன்றவற்றை சமகால சமூக முனைப்புகளுடன் வெளிப்படுத்தியுள்ளது.

### குறிப்புகள்

[1] இரத்தினம், இரா. *குறுந்தொகை.* கங்கை புத்தக நிலையம், சென்னை, 2002.
[2] சிங்காரவடிவேலன், அ. *ஐங்குறுநூறு.* முல்லைப் பதிப்பகம், சென்னை, 2012.
[3] சித்திவஃபீரா. *முத்தமிழ் கலசம்.* இதழ், சுந்தரராமசாமி சிறப்பிதழ், 2019.
[4] சுந்தரராமசாமி. *சுந்தரராமசாமி சிறுகதைகள்.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், நாகர்கோவில், 2011.
[5] தமிழண்ணல். *திருவள்ளுவரின் மனிதநேயம்.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 2000.
[6] நடராஜன், வி. *பாலினம், பள்ளி, சமூகம்.* சாந்தா பப்ளிஷர்ஸ், சென்னை, 2019.
[7] நீலகண்டன், மு. *இந்தியப் பெண்ணியம் அம்பேத்கரின் பார்வை.* கிருஷ்ணா புக் ஹவுஸ், சென்னை, 2019.
[8] பரிமேலழகர். *திருக்குறள்.* சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை, 2016.
[9] மனுஷ்யப் புத்திரன். *உயிர்மை.* உயிர்மை வெளியீடு, மாத இதழ், 2004.
[10] முருகேசன், ச. *தமிழ் இலக்கியத்தில் சமுதாயச் சிந்தனைகள்.* திருக்குறள் பதிப்பகம், எம்.ஜி.ஆர். நகர், சென்னை, 2006.
[11] ரவிக்குமார். *பிள்ளை கெடுத்தாள் விளை.* காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், நாகர்கோவில், 2021.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.